# சைவநெறி

## தரம் 10

## அலகு 17 –இறைவனும் ஆன்மாவும்

## வழிகாட்டல் குறிப்புக்கள்





தொகுப்பு

ச.மதுஷா

கே /தெஹி/ சபுமல்கந்த தமிழ் மகா வித்தியாலயம்

தெரணியகல.

## அலகு 17 – இறைவனும் ஆன்மாவும்



### அறிமுகம்

உலகத்து பொருட்களை மூன்று வகையாக பிரிக்கலாம். அவை

1.அறிவிக்காமலே அறியும் பொருள் - பதி

2.அறிவித்தால் அறியும் பொருள் - பசு

3.அறிவித்தாலும் அறியமாட்டாத பொருள் - பாசம்

மேற்கூறப்பட்ட பதி, பசு, பாசம் என்பவற்றை சைவசித்தாந்தம் முப்பொருள் என அழைக்கின்றது.

இம்மூன்றும் என்றும் உள்ள பொருள்கள். (சத்து பொருள்கள்)

நித்தியமானவை.

அவற்றுக்கு அழிவில்லை.

அவற்றின் சிறப்பம்சங்களை இனி தனித்தனியாக நாம் நோக்குவோம்.

## பதி

- இறைவன், கடவுள், ஈசன் என பல பெயர்களால் அழைக்கப்படும்.
- இறைவன் அறிவிக்காமலே அறியக் கூடிய சித்துப்பொருள். ( சித்து என்பது அறிவு எனப் பொருள்படும் )
- பதிக்கு இரு இலக்கணங்கள் காணப்படுகின்றன.அவை,

01. செரூபலக்கணம் -

- ✓ குணம், குறி, நாமம் அற்ற நிலை ஆகும்.
- ✓ மனம், வாக்கு, காயங்களுக்கு எட்டாத நிலை.
- ✓ ஆனந்தமயமானவர்.

- ✓ அறிவதற்கு அரிவாய் உள்ளவர்.
- ✓ ஆதிசூக்குமமானவர்.
- ✓ விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாட்பட்டவர்.
- ✓ ஆன்மாக்களின் முத்திக்கு இருப்பிடமாய் இருப்பவர்.
- ✓ சைவசித்தாந்தம் செரூபநிலையில் இறைவனை பரமசிவம் என்று கூறும்.

02.தடத்தலக்கணம் -

- ✓ குணம் குறி நாமங்களுக்கு எட்டாத நிலையில் உள்ள இறைவன் ஆன்மாக்களுக்கு பீடித்துள்ள மலங்களில் இருந்து விடுவித்து முத்திபேறு வழங்குவதற்காக குணம் குறி நாமங்களுடன ஒருபடி கீழ்லிறங்கி வந்து அருள் புரித்தல் தடக்கலக்கணம் ஆகும்.
- ✓ இந்நிலையில் இறைவன் முத்திருமேனிகளான அருவம், உருவம், அருவுருவம் கொள்கிறார்.
- ✓ பஞ்சகிருத்தியங்களை (படைத்தல்,காத்தல்,அழித்தல்,மறைத்தல்,
- ✓ அருளல் ) ஆற்றுகின்றார்.

## பசு

- ❖ பாசங்களால் கட்டுண்ட ஆன்மாக்களே பசு எனப்படும்.
- ❖ ஆன்மா,ஜீவன்,உயிர் என அழைக்கப்படும்.
- ❖ அநாதியானவை.
- ❖ பாசங்களால் பீடிக்கப்பட்டவை.
- ❖ பாசத்தையோ பதியையோ சார்ந்தே காணப்படும்.
- ❖ பதியை சாரும் போது சத்து பொருளாகவும் பாசத்தை சாரும் போது அசத்தாகவும் காணப்படுவதால் பசுவினை சதசத்து என அழைப்பர்.
- ❖ ஆன்மாக்கள் எண்ணற்றவை.
- ❖ அறிவித்தால் அறியக் கூடியவை.
- ❖ தனித்தனிச் சரீரங்களில்(உடம்புகளில்) நின்று வினைகளை (செயல்களை) செய்து வினைப்பயன்களை அனுபவிக்கிறது.

- பாசங்களால் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள் மூன்று வகையினர்.

01.சகலர்- ஆணவம் , கன்மம் , மாயை

என்னும் மூன்று மலங்களால்

பீடிக்கப்பட்டவர்கள்.

2. பிரளயாகலர் - ஆணவம் , கன்மம் என்னும் இரு

மலங்களால பீடிக்கப்பட்டவர்கள்.

3. விஞ்ஞானகலர் - ஆணவ மலத்தாற் பீடிக்கப்பட்டவர்கள்.

## பாசங்கள்

- பாசத்தினை மலம், தளை, கட்டு என்றும் அழைப்பர்.
- பாசங்கள் மூன்று. அவை ஆணவம் , கன்மம் ,மாயை
- இவை அநாதியானவை.
- அறிவற்றவை.(அசித்து)

01. <u>ஆணவமலம்</u>

- மூலமலம்,சகசமலம்,இருள்மலம் எனவும் இம்மலத்தை அழைப்பர்.
- ஆன்மாவை அநாதிகாலந்தொட்டு பீடித்து இருக்கும்.
- நான் என்ற அகந்தையும் எனது என்ற மமந்தையும் ஆன்மாக்களுக்கிடையே ஏற்படுத்தும்.
- ஆணவம் அழியாது, வலிமை குன்றும் போது ஆன்மா முத்தியடையும்.

02. <u>கன்மமலம்</u>

- கன்மம் என்பது செயல் அல்லது வினை .
- கன்மமாவது மனம்(உள்ளம்) , வாக்கு (சொல்), காயங்களால் (உடம்பு ) செய்யப்படும் செயல்கள் ஆகும்.
- அவை நல்வினை , தீவினை என இரு வகைப்படும்.
- இருவினைகளும் பிறவிக்கு காரணமாய் அமைகின்றன.

03. <u>மாயை</u>

- உலகம் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் காரணமாய் விளங்குவது மாயை.
- ஆணவ வயப்பட்டு அறியாமையுள் மூழ்கியிருக்கும் ஆன்மாவிற்கு அறிவினை ஏற்படுத்தும் பொருட்டே இறைவன் தனு,கரண,புவண,போகங்களை மாயையிலிருந்து உருவாக்கி அருள்கின்றார்.

## மலங்களை அறுத்து முத்தி நிலை அடைய ஆன்மாக்கள் செய்ய வேண்டியவை.

- நாற்பாதங்களை (சரியை , கிரியை , யோகம் , ஞானம் ) கடைபிடித்தல்.
- இருவினை ஒப்பு ( ஆன்மாக்கள் ஆணவமலத்தால் விளையும் குற்றங்களின்று விடுப்பட்டு சுத்தம் அடையும் போது உலக இன்பத்தைத் தரும் புண்ணியத்திலாவது துன்பத்தை தரும் பாவத்திலாவது மனம் செல்லாது சிவஞானத்தைப் பெறும் காரியத்தில் ஈடுபடுதல் இருவினையொப்பு எனப்படும்)
- மலபரிபாகம் (இருவினை ஒப்பு ஏற்பட ஆணவமலம் வலி குன்றுவது )
- சத்திநிபாதம்
- விரதங்கள் அனுட்டித்தல் .
- விழுமியப்பண்புகள் கடைபிடித்தல்.

நன்றி